


கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி தி.மு.கழகத்தின் இதயத்துடிப்பான தி.மு.க. இளைஞர் அணியின் பணிகளை கழகத்தின் மாவட்ட அமைப்புகள் வாரியாக கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடர்ந்து ஆய்வு செய்து வருவதறிவோம்! கோவையில் நேற்று நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தின்போது திருப்பூர் வடக்கு மாவட்ட இளைஞரணியின் அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களின் பணிகளை ஆய்வு செய்தார்.




திராவிட இயக்க கொள்கை வழியே இளைஞர்களை வார்த்தெடுக்கும் கழக இளைஞரணியின் திருப்பூர் மாநகர் (வடக்கு) மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களின் பணிகளை கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கோவையில் நேற்று ஆய்வு செய்தார். மக்கள் நலனையும் – கடைக்கோடி தொண்டர்கள் நலனையும் பேணுகின்ற வகையில் செயல்பட வேண்டும் என்ற நம் கழகத் தலைவர் அவர்களின் சொல்படி, இளைஞரணியினர் மேற்கொண்டு வரும் பணிகள் குறித்து கேட்டறிந்தார். மேலும், அவர்கள் பொறுப்பில் நியமிக்கப்பட்டு ஓராண்டுகள் நிறைவுற உள்ள சூழலில், நாடாளுமன்றத் தேர்தலில் ஆற்றிய களப்பணி – தலைமைக் கழகம் அறிவிக்கின்ற பணிகளில் இளைஞரணியினர் செய்து முடிக்கின்ற விதம் – பேச்சுப் போட்டி உள்ளிட்ட இளைஞரணியின் அடுத்தடுத்த முன்னெடுப்புகள் புதிய உறுப்பினர்கள் சேர்க்கை உள்ளிட்டவை குறித்து இளைஞர் அணிச் செயலாளரிடம் விளக்கினர்.




திருப்பூர் மாநகர் (தெற்கு) மாவட்ட இளைஞரணியின் அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களின் பணிகளை கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கோவையில் நேற்று ஆய்வு செய்தார். இளைஞரணியின் மூலம் நிர்வாகிகள் ஆற்றிய பணிகளை – பங்களிப்புகளை ஒவ்வொருவரிடமும் தனித்தனியாகக் கேட்டறிந்தார்.




கோவையில் நேற்று நடைபெற்ற தி.மு.க. இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர இளைஞரணி அமைப்பாளர்கள் – துணை அமைப்பாளர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தின் போது, கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருப்பூர் தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களைச் சந்தித்து, அவர்களுடைய பணிகளை ஆய்வு செய்தார்.




தி.மு.கழகத்தின் துடிப்புமிக்க கொள்கைப் படையாகத் திகழும் தி.மு.க. இளைஞர் அணியின் பணிகளை தொடர்ச்சியாக ஆய்வு செய்து வரும் கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அதன் ஒரு பகுதியாக, நீலகிரி மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களின் பணிகளை நேற்று ஆய்வு செய்தார்.



கோவை வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களின் பணிகள் குறித்து, கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று ஆய்வில் ஈடுபட்டார். அப்போது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை மக்கள் பயன்பெறும் வகையில் கொண்டாடிய விதம் – இல்லந்தோறும் இளைஞரணி முன்னெடுப்பின் கீழ் புதிய உறுப்பினர்களைச் சேர்த்த விவரம் – நீட் தேர்வுக்கு எதிரான போராட்டம் – தேர்தல் வெற்றிக்கு இளைஞர்களை ஒருங்கிணைத்தது உள்ளிட்டவை குறித்து இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள் கேட்டறிந்தார்கள். தொடர்ந்து களப்பணியில் ஈடுபட்டு, கழகத்தின் அசைக்க முடியாத கோட்டையாக கோவை வடக்கு மாவட்டத்தை மாற்றிக் காட்ட அயராது உழைக்க அறிவுறுத்தினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (14.6.2024) முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாணிக்கம் தாகூர் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் உள்ளனர்.

### அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வரவேற்புரை! அண்ணா அறிவாலயத்தில்

# அமைச்சர் கயல்விழி செல்வராஜ் இல்ல மணவிழா : கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமை!

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் - இல.பத்மநாபன் முன்னிலை! அமைச்சர் பெருமக்கள் வாழ்த்து!

சென்னை, ஜூன் 16 -

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல் விழி செல்வராஜ் - திருப்பூர் தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணித் தலைவர் கே. செல்வராஜ் ஆகியோரின் புதல்வர் எஸ்.கே. திலிபனுக்கும், இராமநாதபுரம் மாவட்டம், ஏ.எம்.ராமகிருஷ்ணன் - கே.கே.கீதா (எ) ரோஜா ஆகியோரின் புதல்வி ஆர்.ஜி.ஜனனி ஆகியோரின் மண விழா 19.6.2024 - புதன் கிழமை அன்று காலை 9.30 மணிக்கு, தேனாம்பேட்டையில் உள்ள அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெறுகிறது.

கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

மண விழாவினை கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

மண விழாவில் கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் இல.பத்ம நாபன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மண விழாவில் அமைச்சர் பெருமக்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள் முன்னாள் உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் ஆன்றோர், சான்றோர், உற்றார், உறவினர்கள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மணவிழாவில் கழக மகளிர் அணி துணைச் செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வ ராஜ் நன்றி கூறுகிறார்.

